இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

## பிரதமர் மற்றும் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இடையிலான தொலைபேசி உரையாடல்

2020 மே 27 ஆம் திகதி இந்திய செய்தி & தகவல் பிரிவால் வெளியிடப்பட்டது

இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவாகி 50 ஆண்டுகளை நிறைவு செய்தமைக்கான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் பிரதமர் கௌரவ நரேந்திர மோடி அவர்கள் இன்று தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையடினார்.

கௌரவ.ராஜபக்ஷ அவர்களின் நீண்ட அரசியல் வாழ்க்கையில் , இலங்கையின் அபிவிருத்திக்கு அவர் வழங்கிய பங்களிப்பை நினைவு கூர்ந்த பிரதமர் , எதிர்காலத்திலும் அவர் சிறந்து விளங்க வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர்களின் முக்கிய தலைவரான திரு . ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மரணம் குறித்து பிரதமர் தனது அனுதாபங்களையும் தெரிவித்தார். இந்தியா, இலங்கை இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பை முன்னெடுத்துச் சென்றதில் திரு. தொண்டமான் ஆற்றிய பங்களிப்பை பிரதமர் நினைவு கூர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 தொற்றின் காரணமாக, சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்தும் இந்த சவால்களில் இருந்து மீட்சிபெற இரு நாடுகளிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இருவரும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர் . இந்தச் சவாலான காலகட்டத்தில் சாத்தியமான அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்க இந்தியா தயாராக உள்ளதாக திரு.ராஜபக்ஷவிடம் பிரதமர் உறுதியளித்தார்.

****

VRRK/SH